2006 ஆகஸ்ட் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதியில், அங்கன்வாடியில் பணி செய்யும் ஊழியர்கள் மாதம் ஒரு முறை கூட்டங்கள் நடத்த, திருப்போரூர் மற்றும் காட்டாங்குளத்தூர் ஒன்றியங்களில் நிரந்தரக் கட்டடம் ஏதுமில்லை. அவர்கள் அனைவரும் மரத்தடியில் நின்றுதான் கூட்டம் நடத்துகிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான கட்டடம் காட்டாங்குளத்தூர் மற்றும் திருப்போரூர் ஒன்றியங்களில் கட்டித் தரப்படுமா? அதேபோன்று, பால்வாடி பள்ளிக்கூடங்கள் ஒழுங்காக இல்லை, ஒழுகுகின்றன. தரமான கட்டடங்கள் இல்லை. அவற்றையும் சரி செய்து தர ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக அரசு இதனைப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

110—

பால் குளிரூட்டும் நிலையம்

***802—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, களம்பூர் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஆகஸ்ட் 28

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதிதாகப் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்குப் பதிலாக, வாய்ப்புள்ள இடங்களில் மொத்தப் பால் குளிர்விப்பான்கள் அமைத்து, பால் சேகரம் செய்வது எனக் கொள்கை முடிவு எடுத்து நடைமுறைப்படுத்தி வருவதால், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதிக்குட்பட்ட களம்பூர் பகுதியில் தனியாகப் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க இயலாது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தஞ்சை டெல்டா மாவட்டங்களில், விவசாயத்திற்கு அடுத்ததாகப் பால் உற்பத்தியாளர்கள் அதிகமாகப் பயன் அடையக்கூடிய பால் குளிர்படுத்துகின்ற அந்த நிலையத்தை மயிலாடுதுறையில் எங்கள் பகுதிக்கு அமைத்திருக்கிறார்கள். 1996–2001 ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட அது, இடையில் சீர்கெட்டிருக்கிறது. குத்தாலம், மயிலாடுதுறை மற்றும் செம்பனார்கோயில் பகுதிகளிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களும் பயன் அடையக்கூடிய அளவிற்கு உள்ள நாகை மாவட்டம், மயிலாடுதுறையிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தினை மீண்டும் செயல்படுத்த, மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு செயலாக்கம் செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28–1–2002 முதல், தஞ்சாவூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் பால் உற்பத்தி குறைந்த காரணத்தினால், மயிலாடுதுறை பால் குளிரூட்டும் நிலையத்தின் செயல்பாடு நிறுத்தப்பட்டுள்ளது. கடைசியாக, இந்தப் பால் குளிரூட்டும் நிலையத்தின் கையாளும் திறனான, நாளொன்றுக்கு 10 ஆயிரம் லிட்டர் என்பது, 600 லிட்டராகக் குறைந்ததால், செயல்பாடு நிறுத்தப்பட்டுள்ளது. தற்சமயம், மயிலாடுதுறை பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பாலின் அளவு சுமார் 2,000 லிட்டராகும். அதில்,

2006 ஆகஸ்ட் 28]

காவிரிப்பூம்பட்டினம் பகுதியில் மட்டும் உற்பத்தி சுமார் 1,200 லிட்டராகும். எனவே, காவிரிப்பூம்பட்டினத்தில் மொத்தப் பால் குளிர்விப்பான் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்சமயம் உடனடியாக மயிலாடுதுறையில் பால் குளிரூட்டும் நிலையத்தைச் செயல்படுத்த இயலாது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, ஈரோடு மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலே விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கிற பாலுக்கு ஒரு ரூபாய் குறைத்துக் கொடுக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று வினவியபோது, 'அந்த ஒன்றியங்கள் எல்லாம் நஷ்டத்திலே ஓடுகின்றன; எனவே, ஒரு ரூபாய் குறைத்துக் கொடுக்கிறோம்' என்று சொல்கிறார்கள். எனவே, அந்த நஷ்டத்தை அரசு ஈடு கட்டி, விவசாயிகளுடைய கொள்முதல் விலையை--அந்தக் குறைக்கப்பட்ட விலையை அரசு உயர்த்தித் தருமா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். அதோடு, ஈரோட்டிலே, கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வந்த, N.D.D.B. என்கிற தேசிய பால் வள நிறுவனத்தினுடைய அலுவலகம் கடந்த ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து மூடப்பட்டு விட்டது. அதைத் திறப்பதற்கும் அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துகளை, அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, நான் அங்கே நேராகச் சென்று, அதைப் பரிசீலித்து, அதன் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]